# மஞ்சள் காமாலை பரிசோதனை கல்லீரல் பாதிப்புகள்

## கே.எம்.சி.ஹெச். டாக்டர் விளக்கம்

**கோவை, ஜூலை 19:** மஞ்சள் காமாலை எனப்படும் ஹெபடைடிஸ் பலவகைப்பட்டது. அது 'ஹெபடைடிஸ் பி' (*Hep 'B'*), 'ஹெபடைடிஸ் சி' (*Hep 'C'*), 'ஹெபடைடிஸ் ஏ' (*Hep 'A'*), 'ஹெபடைடிஸ் இ' (*Hep 'E'*) என்ற பிரிவுகளாகும். இது குறித்து கே.எம்.சி.ஹெச். டாக்டர் பாரி விஜயராகவன் கூறியதாவது:

**'ஹெபடைடிஸ் ஏ' மற்றும் 'ஹெபடிடைஸ் இ'** பாதிப்பு அசுத்தமான உணவு உண்பதாலும், சுகாதாரமற்ற குடிநீரை குடிப்பதாலும் ஏற்படுகிறது. இவைகள் பெரும்பாலானோரை பாதிக்கின்றன. இதில், காய்ச்சல், உடல் வலி இருக்கும். இவைகள் பாதித்த 90 சதவீதம் பேருக்கு, தானாகவே சரியாகிவிடும். திரும்பி வராது. எனினும் 5 முதல் 10 சதவீதம் பேருக்கு ஏற்படும் தீவிர பாதிப்பினால் 2 முதல் 3 சதவீதம் பேருக்கு உயிருக்கு ஆபத்தாகிவிடும். இந்நோய் தீவிரமடைந்தாலும் சிகிச்சை உள்ளது. 'ஹெபடைடிஸ் ஏ' வராமல் தடுக்க தடுப்பூசி உள்ளது.

**'ஹெபடைடிஸ் பி' மற்றும் 'ஹெபடைடிஸ் சி':** இது ரத்தத்தின் மூலம் பரவுகிறது. ரத்த பரிமாற்றத்தின்போதோ, உடலுறவின் போதோ, உடலில் ரத்தத்தின் மூலம் இக்கிருமி தொற்றுகிறது.

இக்கிருமி தொற்றி 10 முதல் 20 ஆண்டுகளுக்கு பிறகு தான் வியாதி தெரிய வரும். அதாவது, இக்கிருமி பாதிப்பால் கல்லீரல் முழுமையாக பாதித்த பின்னர், வயிற்றில் வலி மற்றும் வயிற்றில் நீர் கோர்த்தல், கல்லீரல் வீக்கம், ரத்த வாந்தி ஆகிய அறிகுறிகளுடன் தெரியவரும். இதில் வயிற்றில் நீர் கோர்த்தல் இருந்தால், அது கல்லீரல் பாதிப்பின் முற்றிய நிலையாகும். அது சிரோசிஸ் என்றழைக்கப்படுகிறது.

**சிரோசிஸ் நிலை** ஏற்பட்டால் மோசமாகாமல் கட்டுப்படுத்த முடியும். சிரோசிஸ் நிலை கல்லீரலை புற்றுநோயாகவும் மாற்றும்.



டாக்டர் பாரி விஜயராகவன்

கல்லீரல் பாதித்தாலும், கல்லீரலில் புற்றுநோய் ஏற்பட்டாலும் நிரந்த தீர்வு, பாதிக்கப்பட்ட கல்லீரலை அகற்றி, மாற்று கல்லீரல் பொருத்தவேண்டும். மாற்று கல்லீரலை உறவினர் மூலம் பாதி கல்லீரல் பெற்றோ, மூளைச்சாவு அடைந்தவர் மூலம் தானமாக பெற்றோ பொருத்தலாம்., 'ஹெபடைடிஸ் பி' பாதிப்பை வராமல் தடுக்க, தடுப்பூசி உள்ளது. இத்தகைய கிருமி பாதிப்பு உள்ளதா என்பதை ரத்த பரிசோதனையில் கண்டறியலாம். கிருமி தொற்று இருந்தால் மருந்து மூலம் போக்கலாம். சிரோசிஸ் அறிகுறிகள் வருவதற்கு முன்பே கண்டுபிடித்தால் கல்லீரல் பாதிப்பை தடுக்கலாம்.

**கல்லீரல் பற்றி எல்லா விபரங்களுக்கு, டாக்டர் பாரி விஜயராகவன், கே.எம்.சி.ஹெச். மருத்துவமனை, அவிநாசி ரோடு, கோவை. செல் :733 9333 485. ஆகியவற்றில் தொடர்பு கொள்ளலாம்.**

—Advt